2014 ஜூலை 25]

**திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமே எனது குடும்பம், தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே எனது நலன் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உயரிய எண்ணத்தோடு, இலட்சிய நோக்கோடு, முற்போக்கு சிந்தனையோடு, முடிவில்லா வெற்றிகளோடு, தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் முன்னேற்றமான பல நன்மைகளை அள்ளித்தரும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

*காஞ்சிபுரத்திலிருந்து தினந்தோறும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் திருப்பதிக்குச் சென்று வருகின்றார்கள். அவர்களுடைய வசதிக்கேற்ப குளிர்சாதனப் பேருந்தை இயக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று மிக விரைவில் அங்கு இயக்கப்படும் என்ற மாண்புமிகு அமைச்சரின் பதிலுக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 261, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**261—**

**மழைநீர் வடிகால்**

***7955—திரு. தா. மலரவன்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் மாநகராட்சி, அவினாசி சாலை மேம்பாலத்தின்கீழ் மழைக் காலத்தில் தேங்கும் தண்ணீரை வெளியேற்ற அரசு ஆவன செய்யுமா?*

[2014 ஜூலை 25

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சி, அவினாசி சாலை மேம்பாலத்தின்கீழ், மழைக் காலத்தில் தேங்கும் தண்ணீரை அகற்ற மேம்பாலப் பகுதியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் பிரதான மழைநீர் வடிகால் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதால், மழைக் காலங்களில் அதிகப்படியாக வரும் தண்ணீர் மழைநீர் வடிகால் வழியாக வெளியேறிவிடுகிறது. இதன் காரணமாக மழைக் காலங்களில் மேம்பாலப் பகுதியில் தண்ணீர் வரத்தின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. மேலும், மழைக் காலங்களில் வரும் தண்ணீர் மேம்பாலப் பகுதியில் உள்ள நீரேற்றும் அறையிலுள்ள மின் மோட்டார்மூலமும் வெளியேற்றப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இதய தெய்வமாக வாழ்ந்து, இந்த நாட்டு மக்களுடைய இதயத்திலே நிறைந்திருக்கக்கூடிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரே அரசியல் வாரிசாக விளங்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய கேள்வியைத் தொடங்குகிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், அவினாசி ரோட்டிலுள்ள மேம்பாலத்தின்கீழ் பாலத்தில் எப்பொழுது மழை பெய்தாலும் தண்ணீர் நின்றுவிடுகிறது. அதனை அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, அங்கு மின் மோட்டார்கள் இருக்கின்றனவே தவிர, அவை சரியாக வேலை செய்வதில்லை. அந்தப் பாலத்திற்கு அந்த மின் மோட்டார்களின் செயல்திறன் போதவில்லை. மழைக் காலங்களில் மக்களும் சரி, வாகன

2014 ஜூலை 25]

ஒட்டிகளும் சரி, பாலத்திற்குள்ளே செல்ல முடியவில்லை. இந்த நிலைமை இன்றைக்கு, நேற்றைக்கு நிகழும் நிகழ்வு அல்ல. பல ஆண்டு காலமாக இதுபோன்ற நிலையே நீடிக்கிறது. அந்தப் பாலம் தி.மு.க. ஆட்சியின்போது கட்டப்பட்ட பாலம். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எந்த வேலையும் ஒழுங்காக நடைபெறவில்லை என்பதற்கு இது ஒன்றே சாட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தண்ணீர் வெளியேறுவதற்கு வழியில்லாமலேயே அந்தப் பாலத்தைக் கட்டியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பாலத்தில் தேங்கும் தண்ணீரை அகற்றினால்தான், கோயம்புத்தூர் மக்கள் போக்குவரத்திற்கும், பாதசாரிகள் நடந்து செல்வதற்கும் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மாநகராட்சிக்கு மேயராக இருந்தவர். அந்தப் பாலம் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கருணாநிதியால் கட்டப்பட்ட மேம்பாலம் ஆகும். அந்தப் பாலத்தில் தேங்கும் தண்ணீர் வெளியேறாமல் இருந்தது உண்மை. கோயம்புத்தூர் மாநகராட்சியில் அவினாசி சாலை மேம்பாலம் 1974 ஆம் ஆண்டிலே கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேம்பாலத்தின் அடியில் மழைக் காலங்களில் தேங்கும் மழை நீரானது 7.5 குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டாரின்மூலம் pump செய்து அருகிலுள்ள மழைநீர் வடிகால்மூலம் வாலாங்குளத்திற்குச் செல்லுமாறு அமைக்கப்பட்டது. இந்தப் பாலத்தின் கீழ்மட்டப் பகுதியிலிருந்து வாலாங்குளம் மட்டம்வரை 4 மீட்டர் கால்வாய் உள்ளது. இப்பாலத்தைச் சுற்றி சுமார் 2 சதுர கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள பகுதிகளிலிருந்து மழைக் காலங்களில் சுமார் 29 இலட்சம் லிட்டர் மழைநீர் வந்து சேர்ந்து கொண்டிருந்தது. அந்த மழைநீரை 7.5 குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டார்மூலம் ஒரு மணிக்கு 13,500 லிட்டர் வீதம் 29 இலட்சம் லிட்டர் நீரை வெளியேற்ற குறைந்தபட்சம் 9 முதல் 10 நாட்கள் தேவைப்பட்டது. ஆனால், தற்பொழுது இந்த மேம்பாலத்தில் 30 குதிரைத் திறன் கொண்ட இரண்டு மின் மோட்டார்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் மழைநீர் முழுவதுமாக வெளியேற்றப்படுகிறது. அதுதவிர, மின்

தடை ஏற்படும் சமயங்களில் கூடுதலாக 50 மற்றும் 12.5 குதிரைத் திறன் கொண்ட இரண்டு டீசல் இயந்திரங்களும் அமைக்கப்பட்டு மழை நீர் உடனுக்குடன் வெளியேற்றப்படுகிறது. மேலும், தற்பொழுது அந்த மேம்பாலத்தைச் சுற்றியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் மழைக் காலங்களில் அதிகப்படியாக வரும் மழைநீர்ப் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால்மூலம் வெளியேறுமாறு அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மேம்பாலத்தின் கீழ்ப் பகுதியில் செல்லும் மழைநீரின் அளவு 14 இலட்சம் லிட்டராகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த மழைநீர் மின் மோட்டார்கள்மூலம் ஒரு மணி நேரத்திற்குள் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் மேம்பாலத்தின் கீழ்ப் பகுதியில் போக்குவரத்து வாகனங்கள் தங்குதடையின்றிச் செல்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மேயராக இருந்ததை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் மேயராக இருந்த காலத்தில் அங்கே என்னென்ன செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்திருக்கின்றேன். அங்கே பக்கத்தில் இருக்கக்கூடிய கிக்கானி பள்ளியருகில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கும். அதை நான்தான் சரி செய்து, அந்தத் தண்ணீரை புரூக் பாண்டு ரோட்டில் கொண்டுபோய் விடுவதற்கான வழிவகைகளைச் செய்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தப் பாலம் வாலாங்குளத்தின்கீழ் இருக்கிறது. இந்தத் தண்ணீரைக் குழாய்கள்மூலம் வாலாங்குளத்திற்குக் கொண்டு சென்றால்தான் அங்கே தண்ணீர் தேங்காமல் செய்ய முடியும். எனவே, இதனைச் சரி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 25]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, அப்படி ஏதாவது ஒரு சூழ்நிலை இருந்தால் கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரம், மாநகராட்சி உள்ளிட்ட பகுதிகளில் சாக்கடை அடிக்கடி பொங்கி வருகின்றது. பம்பிங் நிலையங்கள் முறையாக வேலை செய்யாததால் அவ்வாறு சாக்கடை பொங்கி வருவதாகச் சொல்கின்றார்கள். பிரதான பம்பிங் நிலையங்களில் ஜெனரேட்டர்கள் இருக்கின்றன. எப்போதாவது மின் தடை ஏற்பட்டால், ஜெனரேட்டரைப் போட்டுக்கொள்கிறார்கள். சிறு பம்பிங் நிலையங்களில் ஜெனரேட்டர்கள் இல்லாத காரணத்தினால், காலை ஒரு மணி நேரமோ அல்லது இரண்டு மணி நேரமோ மின் தடை ஏற்பட்டால்கூட, அந்தப் பகுதிகளில் உள்ள சாலைகள் முழுவதும் சாக்கடை நீர் நிரம்பி வழிந்து விடுகிறது. ஆகவே, சிறு பம்பிங் நிலையங்களில் ஜெனரேட்டர்கள் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கோயம்புத்தூர் மாநகராட்சி மேம்பாலத்தில் தண்ணீர் தேங்கியது பற்றிய கேள்வியாகும். இந்தக் கேள்விக்கும், மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதெல்லாம், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில்தான் நடந்தது. சென்னை மாநகரத்தில், மழை பெய்தால், உடனடியாக மழைநீர் அப்புறப்படுத்தப்பட்டு விடுகிறது, இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல எந்த இடத்தில் மழைநீர் தேங்கியிருந்தாலும் உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவி

அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று சரி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**262—**

## தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா

***35627—திரு. சு. ரவி:**

*மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, செம்பேடு ஊராட்சி, குருவராஜபேட்டையில் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, செம்பேடு ஊராட்சி, குருவராஜபேட்டை கிராமத்தில் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். அரக்கோணம் தொகுதி, செம்பேடு ஊராட்சி, குருவராஜபேட்டை கிராமத்தில் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு, அந்தப் பகுதியில் உள்ள தொழில்முனைவோர்கள் முன்வருவார்களாயின், நடைமுறையில் உள்ள ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்படி, இப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய